# தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

## துணைவேந்தர் நியமனம்
## துணைவேந்தர் தெரிவாய்வுக்குழு
## அறிவிப்பு

தமிழ்நாடு அரசு அரசாணை (வாலாயம்) எண்.174, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை, நாள்:27.07.2021ன்படி, தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பதவிக்கான மூன்று பேரை வேந்தர் அவர்களுக்குப் பரிந்துரை செய்யக் கீழ்க்குறிப்பிட்ட தெரிவாய்வுக் குழுவை அமைத்துள்ளது

| | | |
|---|---|---|
| 1 | மாண்புமிகு திருமதி பிரபா ஸ்ரீதேவன்,<br>முன்னாள் நீதிபதி,<br>சென்னை உயர்நீதிமன்றம். | வேந்தர் நியமனம் |
| 2 | முனைவர் ம. இராசேந்திரன்<br>மேனாள் துணைவேந்தர்<br>தமிழ்ப் பல்கலைக்கழகம் | அரசு நியமனம் |
| 3 | முனைவர் வ. ஜெயதேவன் | பேரவை நியமனம் |
| 4 | பேராசிரியர் மு. செல்வம் | ஆட்சிக்குழு நியமனம் |
| 5 | முனைவர் தி.பத்மநாபன்<br>மேனாள் துணைவேந்தர்<br>தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம் | ஆட்சிக்குழு நியமனம் |

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை 12.03.2018 ஆம் நாளிட்ட அரசாணை(நிலை) எண்.51, அறிவிப்பிற்கிணங்கக் கல்வித் தகுதியும், பணி அனுபவமும் உயரிய தகைமைப் பண்பும் கொண்ட, நேர்மைமிக்க, பொறுப்புவாய்ந்த, மதிப்புமிகு கல்வியாளர்களிடமிருந்து தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பதவிக்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

துணைவேந்தராக நியமனம் பெறுபவர், மூன்றாண்டுகள் பதவி வகிப்பார். பதவிக் காலத்திற்குள் எழுபது வயதை அடைபவரானால் அப்பொழுதே பணி நிறைவு பெறுவார்.

உரிய தகுதியும், அனுபவமும் வாய்ந்த, விருப்பமுள்ள விண்ணப்பதாரர்கள், www.tamiluniversity.ac.in என்ற தளத்திலிருந்து விண்ணப்பப் படிவத்தைப் பதிவிறக்கம் செய்து விண்ணப்பிக்கலாம். முழுமையாக நிறைவு செய்யப்பட்ட விண்ணப்பப் படிவம் "துணைவேந்தர் பதவி விண்ணப்பம், தமிழ்ப் பல்கலைக்கழகம்" என்று உறைமேல் குறிப்பிடப்பட்டுப் பதிவு அஞ்சல் / மின்னஞ்சல் வாயிலாக 07.10.2021 அன்று மாலை 5.00 மணிக்குள் பின்வரும் முகவரிக்குக் கிடைக்கப்பெறவேண்டும். உரிய நாளுக்குப் பின்னர் வரும் விண்ணப்பங்கள் ஏற்கப்படமாட்டா.

**மருத்துவர் ஜ . ஸ்ரீவித்யா,**

(இணைப்பேராசிரியர்- உடற்கூறியல் துறை, சென்னை மருத்துவக்கல்லூரி)

**பொறுப்பு அலுவலர்,**

தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் தெரிவாய்வுக் குழு,

பழைய சிறைச்சாலை வளாகம், பூங்கா நகர், சென்னை-600 003.

மின்னஞ்சல்: tamilvcsearch21@gmail.com